

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் நடந்த அவசர செயற்குழு கூட்டத்தில் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ ஆலோசனை வழங்கி, சிறப்புரை ஆற்றினார். உடன்மாநில பிரசார குழு துணை செயலாளர் குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன்,மாவட்ட துணை செயலாளர் முனைவர்பிரபாத் குமார், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஒட்டப்பிடாரம் தொகுதியில்

# பிப்ரவரி 10 அன்று மாபெரும் பொதுக்கூட்டம்!

## மாவட்டச்செயலாளர்,அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, பிப்.9-

தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துரைக்கும் விதமாக தமிழ்நாடு முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளிலும் சிறப்புமிகு பரப்புரை கூட்டம் இம்மாதம் முழுவதும் நடத்திட வேண்டும் என்று முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


பெருவாரியான தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி மக்களுக்கான நலத் திட்டங்களை வழங்கி வருகிறது தி.மு.க அரசு. உற்பத்தி துறையில் முன்னேற்றம், மகளிருக்கான திட்டங்கள் நிறைவேற்றம், புதிய முதலீடுகளை ஈர்ப்பது, கல்வித் துறையில், மருத்துவத் துறையில் என அடிப்படையான துறைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி வேலை வாய்பை வழங்கியுள்ள அரசின் சாதனைகளை எடுத்துரைக்கும் விதமாக 10.02.2026 அன்று மாலை 6 மணிக்கு சிலுவைப்பட்டி விலக்கு, மாப்பிள்ளையூரணியில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

எனது தலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி கழக விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் சண்முகையா எம்.எல்.ஏ. தொகுதி பார்வையாளர் பெருநாழி போஸ் தலைமைக் கழக பேச்சாளர் பு.சரத்பாலா ஆகியோரும் கழக நிர்வாகிகளும் உரையாற்ற உள்ளனர்.

கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், வட்டம், வார்டு கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக செயல் வீரர்கள், பொதுமக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கண்ணீர் அஞ்சலி



கூடலூர், பம்பையத்தேவர் - பாப்பாத்தியம்மாள் இவர்களின் மகனும்,
கூடலூர், P.சந்தனத்தம்மாள், P.ஒச்சாத்தேவர், P.அழகத்தேவர்,
P.ராமர் இவர்களின் சகோதரரும், சி.அமராவதி அவர்களின் கணவரும்,

Ex. கம்பம் ஒன்றிய தி.மு.க. கழக செயலாளரும்,
கூடலூர் தி.மு.க. Ex. நகர செயலாளரும், கூடலூர் Ex. சேர்மனுமான

## திரு. P.சின்னாத்தேவர் அவர்கள்

7-2-2026 சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் நல்லடக்கம் 8-2-2026 ஞாயிறு மாலை 3.30 மணியளவில்
கூடலூரில் நடைபெற்றது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வருத்தத்துடன்

சி.லோகந்துரை - பத்மாவதி
திமுக நகர செயலாளர், நகர் மன்றத்தலைவர்

சி.செல்வேந்திரன் - ஜெயசுதா
துணை பொதுச்செயலாளர், நமது மக்கள் முன்னேற்றக் கழகம் முன்னாள் நகர் மன்றத்தலைவர்

சி.சேரலாதன் PWD அரசு ஒப்பந்ததாரர் - ஜெகஜோதி
மற்றும் பேரன், பேத்திகள், கொள்ளுப்பேரன், பேத்திகள், கூடலூர், தேனி மாவட்டம்.



இராணிப்பேட்டை மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் நவ்லாக் புளியங்கன்னு இரா.சிவஞானம் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் மாவட்ட செயலாளர் ஆர்.காந்தி கலந்து கொண்டு படத்தை திறந்து வைத்தார். உடன் ஜி.கே.குழுமம் சந்தோஷ் காந்தி, வாலாஜா ஒன்றிய செயலாளர் பத்மநாபன், ஒன்றிய நிர்வாகிகள் சுப்பிரமணி , ஜான்ஜெயபால், பக்தா மாவட்ட பிரதிநிதி மோகன், தேர்தல் பணிக்குழு உறுப்பினர் லிங்கேஸ்வரன் பொருளாளர் முத்து கிருஷ்ணன் பன்னீர்செல்வம் மாவட்டவர்த்தக அணி அமைப்பாளர் விஜியகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஏ.கே.எஸ். விஜயன் கண்டன உரை!

# பரமக்குடியில் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம்!

## காதர்பாட்சா முத்துராமலிங்கம் அறிவிப்பு!

பரமக்குடி, பிப்.9-

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம்! மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., அறிவிப்பு வருமாறு :



கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதல்வர் கழக இளைஞர் அணி செயலாளர், இளந்தலைவர் அவர்கள் அறிவுறுத்தலின்படியும், தலைமைக்கழக அறிவிப்பின்படி, தமிழ்நாடு தலைகுனியாது மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (பிப்ரவரி 9- திங்கட்கிழமை), மாலை 5.30 மணியளவில், பரமக்குடி நகராட்சி, காந்தி சிலை அருகில் நடைபெற உள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றார்.

ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள். தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், வாக்குச் சாவடி முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) உள்ளிட்ட கழகதோழர் கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

இன்று இராமநாதபுரத்தில் நடைபெறுகிறது!

# மாவட்டங்கள் தோறும் மீனவர்களிடம் கோரிக்கை - கருத்துக் கேட்புக் கூட்டம்!

## தமிழ்நாடு மீனவர் நல வாரியத் தலைவர் முனைவர் அ. ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, பிப்.9-

தமிழ்நாடு மீனவர் நல வாரியத் தலைவர் முனைவர் அ. ஜோசப் ஸ்டாலின் தலைமையில் மாவட்டங்கள் தோறும் மீனவர்களிடம் கோரிக்கை மற்றும் கருத்துக் கேட்புக் கூட்டம் பிப்.7 அன்று கன்னியாகுமரியிலும், பிப்.8 அன்று திருநெல்வேலி, தூத்துக்குடியிலும் நடைபெற்றது.



இன்று (9.2.2026) காலை 10 மணியளவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறுகிறது.

இதில் வாரிய அலுவல் சாரா உறுப்பினர்கள் என். ஜெ.போஸ், பி. ஜேசுராஜா ஆகியோரும் அலுவலர்கள் சின்னகுப்பன், தமிழ்மாறன், யுவராஜ், இராஜேந்திரன், சிவக்குமார் ஆகியோரும் பங்கேற்கின்றனர்.

நாளை (10.02.2026) காலை 11 மணியளவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஜெகதார்பட்டினத்தில் கூட்டம் நடைபெறுகிறது. இதில் ஏ.தாஜீதீன் பிரபாவதி, பஞ்சராஜா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

11.2.2026 காலை 11 மணியளவில் தங்சாவூர் மாவட்டம் - மல்லிப்பட்டினத்தில் கூட்டம் நடைபெறுகிறது. இதில் ஷர்மிளா, மணிகண்டன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

காலை 3 மணியளவில் திருவாரூர் மாவட்டம் - முத்துப்பேட்டை (ஆலங்காடு)யில் நடைபெறும் கூட்டத்தில் ஏ.தாஜீதீன், ஷர்மிளா, இராஜேஷ்குமார் ஆகியோர் பங்கேற்கின்றனர். 12.2.2026 காலை 11 மணியளவில் நாகப்பட்டினம் மாவட்டம் - நாகை மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் கோ. மனோகரன், ஷர்மிளா, ஜெயராஜ் பங்கேற்கின்றனர்.

13.2.2026 காலை 11 மணியளவில் ஈரோடு மாவட்டம் - அம்மாப்பேட்டையில் நடைபெறும் கூட்டத்தில் எம். முருகன், காசிநாதபாண்டியன், அப்துல் காதர் ஜெய்லானி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

15.2.2026 காலை 11 மணியளவில் சென்னை டுமிங்குப்பத்தில் நடைபெறும் கூட்டத்தில் ஆர்.வி. கணேஷ், ரீனா செல்வி, விஜயலட்சுமி ஆகியோர் பங்கேற்கின்றனர். 16.2.2026 காலை 11 மணியளவில் திருவள்ளூர் மாவட்டம் - பழவேற்காட்டில் நடைபெறும் கூட்டத்தில் ரீனா செல்வி, அஜய் ஆனந்த் ஆகியோர் பங்கேற்கின்றனர் என தமிழ்நாடு மீனவல் நலவாரியத் தலைவர் முனைவர் அ. ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டம் - கூடலூர் முன்னாள் நகர செயலாளர்

# கம்பம் முன்னாள் ஒன்றிய செயலாளர் பி.சின்னாத்தேவர் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி

தேனி, ஜன.9-

தேனி தெற்கு மாவட்டம், ஆண்டிபட்டி தொகுதி கூடலூர் நகரச் செயலாளர் நகர் மன்ற தலைவரும் லோகந்துறை பத்மாவதி தகப்பனார்



தேனி மாவட்டக் கழகத்தின் மூத்த முன்னோடியும், முன்னாள் கம்பம் ஒன்றிய செயலாளர் கூடலூர் (தி.மு.க. நகர செயலாளர்- நகர மன்றத்தலைவர் பி.சின்னாத்தேவர் அவர்கள் மறைவெய்தினார். அவரது மறைவு கூடலூர் பகுதி கழகத்தினரிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அன்னார் கம்பம் ஒன்றிய தி.மு.க. கழகச் செயலாளராகவும், கூடலூர் தி.மு.க. முன்னாள் நகரச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து, கழகத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர். மக்கள் சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட அவர், கூடலூர் நகராட்சி முன்னாள் தலைவராகப் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இவருடைய மறைவிற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநிலமாவட்ட, ஒன்றிய நகர பேரூர் கிளை கழக உள்ளாட்சி பிரதிநிதிகள் அரசு அதிகாரிகள் சார்பு அணி நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.



சுதந்திர இந்தியாவில் தமிழ்நாட்டின் முதல் மாகாண முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பாரதியார் பேருந்து நிலையம் முன்பு எட்டாம் ஆண்டு மினி மாரத்தான் போட்டியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி.மார்கண்டேயன் கொடியசைத்து துவக்கி வைத்தார். நிகழ்வில் விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யாஅய்யன்ராஜ்,விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, உடற்கல்வி ஆசிரியர் வையணன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.